பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 09 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பழங்கால கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்திற்கு மகாராஷ்டிரா, ஒடிஸா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.
3. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கான முதல்கட்டத் தேர்தலில் 61 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
4. பாலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் படைகள் உடனடியாக வெளியேற வேண்டுமென்று ஐ நா சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
5. உலக இளையோர் பளுதூக்கும் போட்டி இன்று ஸ்பெயினில் தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள்--

**[]<<<>>>[]**

பழங்கால கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

மத்திய பிரதேசத்தில் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர், நேற்று இந்தூரில் நெசவாளர்கள் மற்றும் கைவினை கலைஞர்களுடன் கலந்துரையாடினார்.

இத்தகைய கலைஞர்களை ஊக்கப்படுத்துவதுடன், அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்க வேண்டுமென்று கூட்டுறவு நிறுவனங்களை அவர் கேட்டுக் கொண்டார்.

நெசவாளர்களின் பட்டு மற்றும் பருத்தியால் நெய்யப்படும் சந்தேரி மற்றும் மகேஸ்வரி சேலைகளை குடியரசுத் தலைவர் பார்வையிட்டதுடன், நெசவாளர்களின் கைத்திறனுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய பிரதேச ஆளுநர் திரு மங்குபாய் படேல், முதலமைச்சர் திரு மோகன் யாதவ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

தேசிய ஓய்வூதியத் திட்டமான என் பி எஸ் வாத்சல்யா திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், சமீபத்தில் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த மத்திய அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று கூறினார்.

பழைய ஓய்வூதியத் திட்டம் மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றில் உள்ள நல்ல அம்சங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இதனால் மத்திய அரசு ஊழியர்கள் ஓய்வுபெற்ற பின்னர் அவர்களுக்கு உறுதியான ஓய்வூதியம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குழந்தைகளின் பெயரில் கணக்கு தொடங்கி அதில் பெற்றோர்கள் முதலீடு செய்து வருவதன் மூலமாக அக்குழந்தைகளின் எதிர்காலமும் உறுதிப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழந்தைகளின் பெயரில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் முதலீடு செய்வது உள்ளிட்ட அம்சங்கள் இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி வாத்சல்யா திட்டம் சமூக பாதுகாப்பையும், சமூகத்தில் தன்னிறைவையும் அளிப்பதாகக் கூறினார்.

இந்த திட்டத்திற்கான தொடக்க நிகழ்ச்சி நாடு முழுவதும் 75 இடங்களில் காணொலி வாயிலாக நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டத்திற்கு மகாராஷ்டிரா, ஒடிஸா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

மும்பையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய மகாராஷ்டிரா மாநில முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே, மத்திய அரசின் இந்த திட்டத்தினால் நேரமும், பணமும் மிச்சமாகும் என்று கூறினார்.

தேர்தல் காலத்தின்போது நடத்தை நெறிமுறைகள் அமல்படுத்தப்படுவதால் வளர்ச்சித் திட்டப்பணிகள் பாதிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் திட்டம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஒடிஸா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, இந்த திட்டம் குறித்து மத்திய அமைச்சரவையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வரலாற்று சிறப்புமிக்கது என்று பாராட்டு தெரிவித்தார்.

இத்திட்டம் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு புதிய திசையை காட்டும் என்றும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைக்கான முதல்கட்டத் தேர்தலில் 61 சதவீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது கடந்த 35 ஆண்டுகளில் பதிவான அதிகபட்ச வாக்குப்பதிவு என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

புல்வாமா, சோபியான், குல்ஹாம், அனந்தநாக் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய 24 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நேற்று முதல்கட்ட வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று முடிந்தது.

இந்த தேர்தலில் இளைஞர்களும், பெண்களும் அதிக அளவில் வாக்களித்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு உள்ள ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவும் அது கூறியுள்ளது.

புலம் பெயர்ந்த கஷ்மீர் வாக்காளர்களுக்காக ஜம்மு, உதாம்பூர் மற்றும் தில்லியில் முதல் முறையாக அமைக்கப்பட்டிருந்த 24 சிறப்பு வாக்குச்சாவடிகளிலும் ஏராளமானோர் வாக்களித்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஜம்மு-கஷ்மீரில் இரண்டாவது கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

ஆறு மாவட்டங்களை உள்ளடக்கிய 26 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இம்மாதம் 25-ஆம் தேதி இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

உலக உணவு இந்தியா-2024 என்ற நான்கு நாள் சர்வதேச கண்காட்சி மற்றும் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

மத்திய உணவு பதனிடுதல் அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சியில் 90 நாடுகள் பங்கேற்கினறன.

26 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும், மத்திய அரசின் 19 அமைச்சகங்களும் இதில் பங்கேற்கின்றன.

இந்தியாவுடன் இணைந்து ஜப்பான் இம்மாநாட்டை நடத்துகிறது.

உணவு பதனிடுதல் துறையில் புதுமையான கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம், உணவு பதனிடுதல் துறையில் நீடித்த வளர்ச்சி ஆகியவை தொடர்பாக இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

[]<<<>>>[]

பாலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் படைகள் உடனடியாக வெளியேற வேண்டுமென்று ஐ நா சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது குறித்து நேற்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக 124 வாக்குகளும், எதிராக 14 வாக்குகளும் பதிவானது.

43 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

பாலஸ்தீனத்திலிருந்து, இஸ்ரேல் ராணுவம் உடனடியாக வெளியேறுவதோடு, அங்கு புதிய குடியிருப்புகள் கட்டுவதை நிறுத்த வேண்டுமென்றும் அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் 1967-ஆம் ஆண்டுக்குப் பிறகு இஸ்ரேல் கைப்பற்றிய பகுதிகள் மற்றும் சொத்துக்களை திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்றும அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்துக்கு அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன.

அதே நேரத்தில் அமெரிக்க ஆதரவு நாடுகளான பிரான்ஸ், மெக்ஸிகோ ஆகியவை தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

சுதந்திரம் மற்றும் நீதிக்கான மற்றொரு முக்கிய நடவடிக்கையாக இந்த தீர்மானம் அமைந்துள்ளது என்று ஐ நா-வுக்கான பாலஸ்தீன தூதர் திரு ரியாத் மன்சூர் கூறினார்.

[]<<<>>>[]

இலங்கையில் அதிபர் தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று நள்ளிவுடன் நிறைவடைந்தது.

இதன் பின்னர் பிரச்சாரத்தில் ஈடுபடுவோர் மீது தேர்தல் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

நேற்று மாலை தலைநகர் கொழும்புவில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

தற்போதைய அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு சஜித் பிரேமதாசா, தேசிய மக்கள் முன்னணி தலைவர் திரு அனுராக் குமார திசநாயகா உள்ளிட்ட 38 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இலங்கை அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

கனடாவில் உயர்கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்கு வழங்கப்படும் விசா எண்ணிக்கையை அந்நாட்டு அரசு குறைத்துள்ளது.

நடப்பு ஆண்டில் நான்கு லட்சத்து 85 ஆயிரம் மாணவர்களுக்கு விசா வழங்க இருந்த நிலையில் அதில் பத்து சதவீதத்தை குறைத்துள்ளதாக கனடா குடியுரிமைத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஐந்து லட்சத்து 60 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விசா இந்த ஆண்டு மூன்று லட்சத்து 60 ஆயிரம் பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

லெபனானில் நேரிட்ட தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 32-ஆக அதிகரித்துள்ளது. இந்த சம்பவத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஹெஸ்புல்லா அமைப்பு பயன்படுத்தும் தகவல் தொடர்பு சாதனங்கள் வெடித்ததால் இந்த விபத்து நேரிட்டது.

நேற்று வாக்கிடாக்கி சாதனம் வெடித்ததில் 20 பேர் உயிரிழந்தனர். 450-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பேஜர் சாதனம் வெடித்ததில் 12 பேர் உயிரிழந்தனர், மூவாயிரத்திற்கும் அதிமானோர் காயமடைந்தனர்.

[]<<<>>>[]

தில்லி கரோல்பாக் பகுதியில் நேற்று இரவு பழமையான கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். 14-பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் ராம்மனோகர் லோகியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனா.

சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்ட பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பன்சூரி ஸ்வராஜ், பழமையான கட்டிடங்களை அகற்றுவதில் தில்லி அரசின் அலட்சியமே இத்தகைய விபத்துக்குக் காரணம் என்று குற்றம்சாட்டினார்.

மோசமான நிலையில் உள்ள கட்டிடங்களை இடிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பத்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று தில்லி முதலமைச்சராக பதவியேற்க உள்ள திருமதி அதிஷி அறிவித்துள்ளார்.

[]<<<>>>[]

உத்திரபிரதேச மாநிலம் மதுராவில் நேற்று இரவு சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்டது.

அந்த ரயிலின் 25 பெட்டிகள் தடம்புரண்டுள்ளதால் அந்த பாதையில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ரயில் போக்குவரத்தை சீரமைக்கும் பணியில் ரயில்வே ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக மண்டல ரயில்வே மேலாளர் திரு தேஜ் பிரகாஷ் அகர்வால் கூறினார்.

[]<<<>>>[]

உலக இளையோர் பளுதூக்கும் போட்டி இன்று ஸ்பெயினின் லியோனில் தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் ஒன்பது பேர் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

ஹங்கேரியில் நடைபெற்று வரும் செஸ் ஒலிம்பியாட் போட்டியின் ஏழாவது சுற்றில் இந்தியா – சீனாவை வென்றது.

பொதுப்பிரிவில் குகேஷ், சீனாவின் **Wei yi ding** -யை வென்றார்.

மகளிர் பிரிவில் இந்திய அணி ஜார்ஜியாவை வென்றது.

**[]<<<>>>[]**

இந்தியா – பங்களாதேஷ் அணிக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இந்திய அணியின் பயிற்சியாளராக கௌதம் கம்பீர் பொறுப்பேற்ற பின்னர் இந்திய அணி எதிர்கொள்ளும் முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும்.

**[]<<<>>>[]**

பூட்டானில் நடைபெறவுள்ள 17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய அணி திம்பு சென்றடைந்தது.

இப்போட்டி நாளை தொடங்கி இம்மாதம் 30-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் முதல் போட்டியில் இந்தியா – பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

*End of News*